மாகாணக்கல்வித் திணைக்களம்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் : 09 நேரம் : 2.30 மணி

## பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1) "அவ்விருவரையும் அழைத்து வா" என கலீபா ஆணையிட்டார். இங்கு **ஆணை** என்பது.
   i) எச்சரிக்கை ii) அறிவித்தல் iii) கட்டளை iv) விருப்பு

2) அரவம் கேட்டு கண் விழித்தேன். இதில் **அரவம்** என்பது.
   i) பாம்பு ii) சத்தம் iii) அழுகை iv) பாடல்

3) அவனை நோக்கி ஒரு பூச்சி சுறுசுறுப்பாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. **சுறுசுறுப்பு** என்பதன் எதிர்ப்பதம்.
   i) சோம்பல் ii) உற்சாசம் iii) விறுவிறுப்பு iv) தைரியம்

4) நட்போடு பழகி இலக்கியத்தை நயக்க கற்பிப்பேன். இங்கு **நட்பு** என்பதன் எதிர்ப்பதம்
   i) சிநேகிதம் ii) உறவு iii) அன்பு iv) பகை

5) பலாவினது பிஞ்சு மூசு என்பது போல **வாழையினது** பிஞ்சு
   i) கச்சல் ii) வடு iii) பழம் iv) காய்

6) சோளத்திற்குத் தாள் போல **பனைக்கு**
   i) கூந்தல் ii) மடல் iii) ஓலை iv) கொட்டை

7) **அம்பு, ஒலி, கடல், துன்பம்**, எனப் பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
   i) இடர் ii) பாணம் iii) கார் iv) கலி

8) **ஆசு, கசடு, களங்கம்** என்ற சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
   i) ஞானம் ii) வாசைன iii) குற்றம் iv) சுற்றம்

9) செய்யுளிலே இரண்டாம் எழுத்து ஒன்றிக்க வரும் அணி
   i) மோனை ii) எதுகை iii) சிலேடை iv) மடக்கு

10) நேற்று யாழ்நகரின் பல பகுதிகளிலும் கடுங்காற்றுடன் மழை பெய்தது. இதில் இடம்பெற்ற எழுவாய்
   i) கடுங்காற்று ii) நேற்று iii) மழை iv) யாழ்நகர்

11) சோழனது குதிரைப்படை பாண்டிய நாட்டுக்குச் சென்றது. இங்கு அது உருபு உணர்த்தும் பொருள்
   i) அடைதற்பொருள் ii) கிழமைப் பொருள்
   iii) கருத்தாப் பொருள் iv) நீங்கற் பொருள்

12) பின்வருவனவற்றுள் உருபுகளை ஏற்காத வேற்றுமைகள்
   i) முதலாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ii) ஏழாம்வேற்றுமை, எட்டாம் வேற்றுமை
   iii) ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை iv)முதலாம்வேற்றுமை,ஆறாம் வேற்றுமை

13) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையாக அமைவது
i) பார்த்தேன் ii) சிரித்தேன் iii) வரைந்தேன் iv) உண்டேன்

14) செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினையாக அமைவது
i) தன்வினை ii) பிறவினை iii) செய்வினை iv) செயப்பாட்டுவினை

15) இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவிலே கொண்டாடப்படும் விழா
i) வெள்ளிவிழா ii) பொன்விழா iii) மணிவிழா iv) பவளவிழா

16) ‘‘வாகை சூடுதல்’’ என்னும் மரபுத்தொடரின் பொருள்
i) நிறைவடைதல் ii) கைகூடுதல் iii) திருப்தி அடைதல் iv) வெற்றியடைதல்

17) தம்பி விரைவாக ஓடுஓடு. இவ்வாக்கியத்தில் **ஓடுஓடு** என்பது,
i) அடுக்குத்தொடர் ii) இரட்டைக்கிளவி
iii) இணைமொழி iv) அடுக்கிடுக்குத்தொடர்

18) காலையிலே பறவைகள் கூட்டைவிட்டுப் பறந்தன**;** இரை தேடின; கூடுகளுக்குத் திரும்பின; குஞ்சுகளுக்கு இரையினைக் கொடுத்தன. இவ்வாக்கியத்திலே அதிக தடவை இடம்பெற்றுள்ள நிறுத்தக்குறியீடு.
i) காற்புள்ளி ii) அரைப்புள்ளி iii) முக்காற்புள்ளி iv) முற்றுப்புள்ளி

19) **திரைகள் தாலாட்டக் கமலப்பள்ளியில் அன்னம் இனிது துயின்றது**. இங்கு வந்த அடைமொழி
i) எழுவாய் அடைமொழி ii) பயனிலை அடைமொழி
iii) செயப்படுபொருள் அடைமொழி iv) எச்ச அடைமொழி

20) ‘‘ஸ்பைசெஸ்’’ (Species) என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்
i) உணர்கொம்பு ii) வயிறு iii) கொடுக்கு iv) இனங்கள்

21) குமார் வேகமாக ஓடினான். அவனால் முதற்பரிசைப் பெறமுடியவில்லை. இவ் வாக்கியங்களை இணைப்பதற்குப் பொருத்தமற்ற இணைப்பிடைச் சொல்லாக அமைவது.
i) ஆகவே ii) ஆனால் iii) எனினும் iv) இருப்பினும்

22) “செய்யும் தொழிலே தெய்வம்’’ என்னும் பாடலைப் பாடியவர்
i) வல்லிக்கண்ணன் ii) பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்
iii) யோ. பெனடிக்ற்பாலன் iv) அன்புமுகைதீன்

23) பின்வருவனவற்றுள் சமனில் வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம்.
i) தனிவாக்கியம் ii) தொடர் வாக்கியம் iii) கலப்பு வாக்கியம் iv) கூட்டு வாக்கியம்

24) காட்டில் பாலைப்பழங்கள் ................... என உதிர்ந்தன.
i) மட மட ii) கமகம iii) மளமள iv) பொலுபொலு

25) பின்வருவனவற்றுள் சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்க.
i) புடைவை ii) கலாச்சாரம் iii) பிரச்சினை iv) வேர்வை

26) பின்வருவனவற்றுள் தன்வினையாக அமைவது
i) ஊட்டினாள் ii) ஆடினாள் iii) உருட்டினாள் iv) ஆட்டினாள்

27) பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயராக அமைவது
i) புகைவண்டி ii) விருந்தாளி iii) நீளம் iv) காட்சி

28) “கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? இதற்கு ஒத்த பழமொழி.

i) சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?
ii) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?
iii) கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை?
iv) உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

29) பயனற்றது என்ற கருத்தைத் தராத உவமைத் தொடர்

i) ஆற்றிலே கரைத்த புளி போல
ii) ஓட்டைக் குடத்திலே வார்த்த நீர் போல
iii) கல்லிலே நார் உரிப்பது போல
iv) காட்டிலே எறித்த நிலாப் போல

30) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி ஒரு பந்தியாக்குவதற்குரிய வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) இதனை “முத்தமிழ் காப்பியம்” எனவும் கூறுவர்
ஆ) இது மூவேந்தர் பெருமை நாட்டின் இயல்பு, ஆட்சிச் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.
இ) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம்
ஈ) கோவலன், கண்ணகி வரலாற்றைக் கூறும் இது இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.
உ)இந்நூல் மூன்று பெரும் உண்மைகளை ஆதாரமாக் கொண்டது.

i) இ, ஆ, ஈ, உ, அ
ii) அ, இ, ஈ, உ, ஆ
iii) இ, ஈ, அ, ஆ உ
iv) ஈ, அ, உ, ஆ, இ

**(30 x 1= 30 புள்ளிகள்)**

## பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) **பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 200 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.**

1) இயற்கையைப் பாதுகாப்போம்
2) கல்வியும் தொடர்பாடல் சாதனங்களும்
3) விரைவு உணவுகளும் உடல் ஆரோக்கியமும்
4) நான் நாஸாவிலிருந்து சந்திரமண்டலத்திற்குச் சென்ற வேளை....

**(20 புள்ளிகள்)**

2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.

“உயிரைக் காவுகொள்ளும் டெங்குவை முற்றாக ஒழிப்போம்” என்ற தொனிப்பொருளில் அமையும் **துண்டுப்பிரசுரம்.**

**அல்லது**

கொழும்பில் வசிக்கும் உமது நண்பனுக்கு “நீர் வாசித்து இரசித்த இலக்கியக்கதை ஒன்றினை எடுத்துக்கூறி, புத்தகவாசிப்பினை மேம்படுத்தும் நோக்கில் **கடிதம்** எழுதுக.

**(12 புள்ளிகள்)**

3) **பின்வரும் பாடலைக் கிரகித்து விடை எழுதுக.**

துன்பம் பிறர்க்கு ; நல் இன்பம் நமக்கெனும்
துட்ட மனோ பாவம் ;
அன்பினை மாய்க்கும் ̇ அறங்குறைக்கும் ; புவி
ஆக்கந் தனைக் கெடுக்கும்
வன்புக்கெலாம் அதுவே துணையாய் விடும்
வறுமை யெலாம் சேர்க்கும் 1
இன்பம் எல்லோர்க்கும் என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழங்குவாய்.

நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்
நச்சு மனப் பான்மை ;
தொல் புவி மேல் விழும் பேரிடியாம் அது
தூய்மைதனைப் போக்கும் ;
சொல்லிடும் நெஞ்சில் எரிமலை பூகம்பம்
சூழத் தகாது கண்டாய் !
செல்வங்கள் யார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழங்கிடுவாய்.

i. பேரிகை என்பது யாது?
ii. தீய மனோபாவம் உடையவர்களின் எண்ணப்பாங்கு யாது?
iii. தீய மனோபாவத்தினால் ஏற்படும் விளைவுகள் இரண்டு தருக?
iv. புவியின் எழுச்சிக்குத் தடையாக இருக்கும் மனநிலை எது?
**v. ஒத்தபதம் தருக.**
அ. அல்லல்
ஆ. மிடில்

**(10 புள்ளிகள்)**

04) அ) **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1) ஒரு சின்னஞ்சிறு பூச்சி என்ற கதையில் சின்னப்பூச்சியின் உருவ அமைப்பை கதாசிரியர் எவ்வாறு வருணிக்கின்றார்?
2) உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருட்கள் எவை?
3) 'சிறுமையுள் நீங்கிய இன்சொல்'' தருவது எதுவென வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்?
4) எறும்புக் கூட்டம் ஒன்றில் காணப்படும் மூன்று பிரிவுகளும் எவை?
5) தந்தை மகளுக்கு எழுதிய கடிதத்தில் வெகுமதி, தண்டனை பற்றி தந்தை கருதுவது யாது?

**(10 புள்ளிகள்)**

ஆ) **பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டுள்ளன என்பதனை எழுதுக.**

1) ''அங்கு ஒரு தாயும் மகளும் இருப்பார்கள், அவ்விருவரையும் அழைத்து வா''
2) ''அழுகிய மலர்கள், களைச்செடிகளை விட மோசமான நாற்றம் எடுக்கும்''

3) ‘‘சரி ! சரி! போதும் உன் உபதேசம். மேலும் பேசி என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.’’

4) ‘‘உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும். சாப்பிடலாம்’’

5) ‘‘முன்பு இடி இடித்தது, இப்போது மழை பெய்கிறது.

**(10 புள்ளிகள்)**

**5) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

1) வண்மை - ......................................................................................................................................

2) பிறை - ......................................................................................................................................

3) பரவை - ......................................................................................................................................

4) கரும்பு - ......................................................................................................................................

5) தடாகம் - ......................................................................................................................................

**(5 புள்ளிகள்)**

**6) பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.**

1) யாருக்கு வெற்றி உனக்கா பூச்சிக்கா என்று கேட்டேன்.

2) ஆகா என்ன ஒரு ஆச்சரியம் இவ்வளவு அழகாக உள்ளது என்றார்.

3) கொழும்பு கண்டி காலி யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய ஐந்து நகரங்களிலும் இப்பரீட்சை நடைபெறும்

**(03 புள்ளிகள்)**